**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), பொள்ளாச்சி**
2022 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 21 ஆம் நாள் திங்கள்கிழமை
**ஐ.ஏ.எண்.02/2022 இன் அ.வ.எண்.369/2021**

P.ஜெயந்தி ... மனுதாரர் / உத்தேச பிரதிவாதி

/ எதிர் /

1.சந்திரலேகா
2.மேனகா
3.தாரணி ... எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

4.வட்டாட்சியர், ஆனைமலை
5.மாவட்ட ஆட்சியர், கோயமுத்தூர் ... எதிர்மனுதாரர்கள் / 2, 3 பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 10.11.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் / உத்தேச பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ரவி, அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## ஆணையுரை

இம்மனுவானது, மனுதாரரை அசல் வழக்கில் 4–ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2) பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரரது மனு சங்கதியின் சுருக்கம் :**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் உத்தேச தரப்பினர் ஆவார். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவர். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மற்றும் மேற்படி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதியான நித்ய சரண் ஆகியோர்கள் மட்டுமே இறந்து போன டாக்டர்.பழனிச்சாமி என்பவருக்கு

வாரிசுதாரர்கள் என்று விளம்புகை பரிகாரம் கோரி மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் / வாதி, பழனிச்சாமி என்பவரின் மனைவி அல்ல. மனுதாரரே, பழனிச்சாமி என்பவரின் சட்டப்பூர்வமான மனைவி ஆவார். மனுதாரருக்கும், பழனிச்சாமி என்பவருக்கும் பிறந்த மகன் தான் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். மேற்படி விபரங்கள் அனைத்தும் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு தெரிந்திருந்தால் தான் அவர்கள் இம்மனுதாரருக்கும், அவரது மகனுக்கும், 4, 5 எதிர்மனுதாரர்களுக்கும் எதிராக தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.202/2021 என்ற வழக்கினை திரும்ப பெற்றுள்ளனர்.

**2.2)** பிறகு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் உண்மை விபரங்களை மறைத்தும், மனுதாரரை தரப்பினராக சேர்க்காமலும் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரரும், பழனிச்சாமியும் அவர்களது திருமண வாழ்க்கையின் போது கூட்டாக சொத்துக்களை வாங்கியுள்ளனர். அது தொடர்பான ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர், பழனிச்சாமியின் மனைவி என்பதை நிரூபிக்க அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. சட்டத்திற்கு புறம்பான ஆதாயங்களை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் பெறுவதற்காக மனுதாரரை தரப்பினராக சேர்க்காமல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்காத பட்சம் அவருக்கு ஈடு செய்ய இயலா இழப்பு ஏற்படும். எனவே, மனுதாரரை அசல் வழக்கில் 4–ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>1 முதல் 3 எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர் இறந்து போன டாக்டர்.பழனிச்சாமியின் சட்டப்படியான மனைவி இல்லை என்பதால் மனுதாரரை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில் சட்சி சேர்க்கவில்லை. 1ம் எதிர்மனுதாரரே இறந்து போன

டாக்டர்.பழனிச்சாமிக்கு சட்டப்படியான, முறையான மனைவியாவார். மனுதாரர் தான் சட்டப்படியான மனைவி என்று இந்த மனுவுடன் எவ்விதமான சட்டப்படி ஏற்றுக்கொள்ளகூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. இறந்து போன டாக்டர்.பழனிச்சாமிக்கும், மனுதாரருக்கும் எந்த தேதியில், எந்த ஊரில் எந்த இடத்தில் திருமணம் நடைபெற்றது என்ற விபரத்தை இம்மனுவில் தெரிவிக்கவில்லை. அ.வ.எண்.202/2021 வழக்கானது தட்டச்சு பிழை ஏற்பட்ட காரணத்தால் மட்டுமே எதிர்மனுதாரர்களால் தாவா திரும்ப பெறப்பட்டது என்பதே உண்மையாகும்.

**3.2)** பழனிச்சாமியும், மனுதாரரும் ஒரு சொத்தை சேர்ந்து கிரையம் பெற்றார்கள் என்ற காரணத்தினால் இருவருக்கும் இடையே கணவன், மனைவி என்ற உறவுள்ளது என்று கூற இயலாது. டாக்டர்.பழனிச்சாமியின் மருத்துவ மனையில் உதவியாளராக மனுதாரர் வேலை பார்த்து வந்த காரணத்தால் மருத்துவ மையத்தின் அருகில் இருந்த குடியிருப்பில் வசித்து வந்ததால் எதிர்மனுதாரர் பழனிச்சாமி வசித்த முகவரியை ஏற்படுத்திக்கொண்டார். எனவே, மனுதாரர் இந்த தாவாவிற்கு அவசிய தரப்பினரே அல்ல என்பதால் எதிர்மனுதாரரை தாவாவில் சேர்க்கவில்லை. வாக்காளர் அடையாள அட்டை, துறை சார்ந்த கணக்குகள் மற்றும் புள்ளி விபரங்கள், பெயர்கள் ஆகியவற்றை பொதுவாக ஒருவர் கூறும் தகவலின் அடிப்படையிலேயே பெறக்கூடிய ஆவணங்கள் என்றும், இதை சட்டப்படி திருமணமானவர் என்பதற்கான ஆவணங்களாக ஏற்க முடியாது. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

6) <u>பிரச்சினை</u> :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், மனுதாரர் தரப்பில் மனுதாரர், இறந்துபோன டாக்டர்.பழனிச்சாமியின் சட்டப்படியான மனைவி என்றும், மனுதாரருக்கும், பழனிச்சாமி என்பவருக்கும் பிறந்த மகன் தான் 1ம் பிரதிவாதி என்றும், மனுதாரரும், பழனிச்சாமியும் அவர்களது திருமண வாழ்க்கையின் போது கூட்டாக சொத்துக்களை வாங்கியுள்ளனர் என்றும், மனுதாரர், பழனிச்சாமியின் மனைவி என்பதை நிரூபிக்க அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7) மேற்கண்டவாறான பரிசீலனையிலிருந்து, மனுதாரர், இறந்து போன டாக்டர்.பழனிச்சாமியின் மனைவி என்றும், மனுதாரருக்கும், இறந்துபோன டாக்டர்.பழனிச்சாமிக்கு பிறந்த மகன் தான் 1ம் பிரதிவாதி என்றும் கூறி மனுதாரரின் பெயரில் உள்ள வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை ஆகிய ஆவணங்களை இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களின் உண்மை தன்மை பற்றி விசாரணைக்கு பிறகே முடிவு செய்ய இயலும். ஆகவே இவ்வழக்கை முழுமையாக முடிவு செய்ய மனுதாரர் ஒரு அவசிய தரப்பினர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8) முடிவில், இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, நேரிய வழக்கு விசாரணைக்கு மனுதாரர் அவசியதரப்பினர் என்பதால் அவரை அசல் வழக்கில் 4-ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (21.11.2022) அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/-(N.பாரதிராஜன்)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

..... இல்லை .....

ஒப்பம்/-(N.பாரதிராஜன்)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

---

**அசல் ஆணையுரை**

**ஐ.ஏ.2/2022 இன் ஓ.எஸ்.369/2021**

**நாள் : 21.11.2022**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**பொள்ளாச்சி**

---